செ.வெ.எண்: 05 நாள்: 02.11.2016

# புதுக்கோட்டையில் நடைபெற்ற நிதி உள்ளடக்கத்திற்கான சிறப்பு முகாமில் பயனாளிகளுக்கு ரூ.2.23 கோடி மதிப்பீட்டில் கடன் உதவித்தொகைக்கான காசோலைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

புதுக்கோட்டை நகர் மன்றத்தில் மாவட்ட நிர்வாகம் மற்றும் அனைத்து வங்கிகள் இணைந்து நடத்திய நிதி உள்ளடக்கத்திற்கான சிறப்பு முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்., இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிதி உள்ளடக்கத்திற்கான சிறப்பு முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து பயனாளிகளுக்கு கடனுதவித்தொகைக்கான காசோலைகளை வழங்கி பேசியதாவது.

நமது மாவட்டத்தை சேர்ந்த பொதுமக்களுக்கு வங்கிச்சேவை குறித்த விழிப்புணர்வு மற்றும் ஆதார் எண் இணைப்பிற்கான சிறப்பு முகாம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இம்முகாமில் வங்கி வாடிக்கையாளர்களுக்கு வங்கிக்கணக்குடன் ஆதார் இணைப்பதற்கான விண்ணப்பங்களை பெறுதல் மற்றும் ஆதார் எண் இல்லாதவர்களுக்கு ஆதார் எடுப்பதற்கான தகவல் மற்றும் புகைப்படங்கள் வங்கி அலுவலர்களால் எடுக்கப்பட்டது. மேலும் 169 பயனாளிகளுக்கு வங்கிகளின் மூலம் அனுமதிக்கப்பட்ட ரூ.2.23 கோடி மதிப்பீட்டில் கடனுதவித்தொகைக்கான காசோலைகளும் வழங்கப்பட்டது.

இம்முகாமில் ஆதார் பதிவு செய்தல், தனிநபர் / குழு உறுப்பினர்களின் வங்கிக்கணக்குடன் ஆதார் இணைப்பு, ரூபே அட்டைகள் வழங்கி உபயோகப்படுத்துவது குறித்த அறிவுரை வழங்குதல், வங்கிக்கணக்கு வைத்திருப்பவர்களுக்கு காப்பீட்டு திட்டங்கள், அடல் ஓய்வூதியத்திட்டம் குறித்த விளக்கம் மற்றும் சேர்க்கை, வங்கிகளால் வழங்கப்படும் பல்வேறு சேமிப்பு மற்றும் கடன் திட்டங்கள் குறித்த விளக்கம், வங்கி சார்ந்த துறைகள் கேட்டல் மற்றும் களைதல் உள்ளிட்ட பல்வேறு வங்கி சேவைகள் பொதுமக்களுக்கு வழங்கப்படவுள்ளது.

மேலும் கடனுதவித்தொகைக்கான காசோலைகள் பெறும் பயனாளிகள் இதனை உரிய முறையில் பயன்படுத்தி பொருளாதாரத்தை மேம்படுத்தி வாழ்வில் முன்னேறுவதுடன் வங்கிகடனை உரிய தவணையில் செலுத்தி இதன் மூலம் வங்கி சேவையை மேலும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். தற்பொழுது முதியோர் உதவித்தொகைக்கான காசோலைகள் வங்கிகளின் மூலமே வழங்கப்பட்டு வருகிறது. மேலும் அனைத்து விவசாயிகளும் தங்களது பயிர்களை பிரதம மந்திரி பயிர்க்காப்பீட்டு திட்டத்தின் கீழ் சேர்த்து பயன்பெற வேண்டும். எனவே அனைத்து பொதுமக்களும் இந்த நிதி உள்ளடக்கத்திற்கான சிறப்பு முகாமினை உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இம்முகாமில் முதன்மை மண்டல மேலாளர் திருமதி.ருக்குமணிலெட்சுமணன் (ஐ.ஓ.பி மண்டல அலுவலகம், காரைக்குடி), மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு.பி.சுலைமான் மற்றும் வங்கி அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**